JUL 1987

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம்

---

*[1987, மே மாதம் 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1987 மே 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 3.30 தபாற் செலவு : ரூபா 2.30

## 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூராதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[1987 மே 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 12/87

### உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) 4 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 262 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) இலங்கையிலுள்ள மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் தகுதியானவரும் பொருத்தமானவருமான ஆளொருவர் தெரிவத்தாட்சி அலுவலராக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கெனவும், அத்துடன் ஆளொருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் உதவித் தெரிவத்தாட்சியலுவலர்களாக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கெனவும், பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கப்படலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈஈ) வேறேதேனும் உள்ளூராதிகாரசபையின் அல்லது 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அபிவிருத்திச்சபையொன்றின் உறுப்பினரொருவராக ;".

(2) அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) ஓராம் உட்பிரிவினதும் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, விடயத்துக்கேற்றுப் போன்று மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 277 ஆம் பிரிவின்கீழ் அல்லது அபிவிருத்திச்சபைகள் சட்டத்தின் 63 ஆம் பிரிவின்கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவின்கீழ் அல்லது பிரதேச சபைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்படும் கட்டளைமூலம், நியமிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் எந்த நேரத்திலும் மாநகர முதல்வர் அல்லது மாநகரசபையொன்றின் உறுப்பினர் என்ற பதவியிலிருந்து ஏதேனும் அபிவிருத்திச்சபையின், ஏதேனும் நகரசபையின் அல்லது ஏதேனும் பிரதேசசபையின் தலைவர் அல்லது உறுப்பினர் என்ற பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளவரான ஆளெவரும் அவ்வாறு பதவியிலிருந்து அகற்றப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றிற்கு இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"தேர்தல்களை நடாத்தும் தேதி.*

25. உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினர்களது பொதுத்தேர்தல் ஒவ்வொன்றும், எந்தத் தேதியன்று தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்களான உறுப்பினர்களின் பதவிக்காலம் தொடங்கவுள்ளதோ அந்தத் தேதிக்கு முன்னர் ஆறுமாதங்களுக்குள்ளாக நடாத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது, "வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னரான நாளன்று தொடங்கி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வெளியிடப்பட்ட தேதிக்குப்பின் பதினான்காம் நாளன்று தொடங்கி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :

*"தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல்.*

27. (1) உள்ளூரதிகாரசபையொன்றன் உறுப்பினர்களின் பொதுத்தேர்தல் ஒவ்வொன்றினதும் நோக்கத்துக்காக, தேர்தல் இடப்பரப்பொன்றிற்கு, ஆணையாளரானவர் பகிரங்க அலுவலர் ஒருவரை தேர்தல் இடப்பரப்புக்கு தெரிவத்தாட்சி அலுவலராகவும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பகிரங்க அலுவலர்களை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவும் தேர்தலொன்று தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்கு அல்லது உதவித் தெரி

வத்தாட்சி அலுவலருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அத்தகைய தேர்தல் இடப்பரப்புத் தொடர்பாக, பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பெயர்குறித்து நியமித்தல்வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரான எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்தால், இக்கட்டளைச் சட்டத்தால் அல்லது கட்டளைச் சட்டத்தின்கீழ், அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் இயலாதிருக்குமிடத்து, அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும் அத்துடன் பணிகளையும் வேறொரு பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கலாம்: அத்தகைய கையளிப்பு ஒவ்வொன்றும், இயலக்கூடியளவு விரைவாக, ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும், அவர் அத்தகைய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் எப்பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருந்தனவோ அப்பகிரங்க அலுவலரால் ஏலவே செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி, கையளிப்பை உறுதிப்படுத்தலாம் அல்லது அனுமதிக்காது விடலாம்.

(3) நான்காம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரான எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலர், அவரது மாவட்டத்திலுள்ள தேர்தல் இடப்பரப்பு எதிலும், இப்பிரிவினால் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்கு உரித்தாக்கப்பட்ட, அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அந்த உள்ளூராதிகார சபைக்குத் தெரிவுசெய்யப்படவேண்டிய" என்பதிலிருந்து, "அத்தகைய எண்ணிக்கையான அபேட்சகர்களின் பெயர்களை முந்துரிமை ஒழுங்குப்படி எடுத்துக்காட்டும்" என்பது வரையான எல்லா சொற்களுக்கும் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"அந்த உள்ளூரதிகார சபைக்குத் தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையோடு மூன்றைக்கூட்ட வரும் அத்தகைய எண்ணிக்கைகொண்ட பெயர்களை எடுத்துக்காட்டும்"

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும்.

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(5) நியமனப்பத்திரம் ஒவ்வொன்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் சுயேச்சைக்குழுவொன்றன் விடயத்தில் எந்த வேட்பாளருடைய பெயர் அந்தக் குழுவின் நியமனப் பத்திரத்தில் காணப்படுவதோடு, அக்குழுவின் குழுத்தலைவர் என அதனகத்து பதவி குறிக்கப்பட்டும் இருக்கிறதோ அந்த வேட்பாளரினால் (அத்தகைய வேட்பாளர் இதனகத்துப்பின்னர் "குழுத் தலைவர்", எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கையொப்பமிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் சமாதான நீதிவான் ஒருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்"

அத்தகைய நியமனப் பத்திரம், நியமனக் காலத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் விடயத்தில் அதன் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் அதன் தலைவராலும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும் ;"; அத்துடன்

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நியமனப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்குமிடையில், அத்தகைய குழுவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமனப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்குமிடையில், (எச் சந்தர்ப்பத்திலும் நியமனக் காலப்பகுதியின் முடிவுக்கு நேர்முந்திய நாளன்று பி. ப. 12 மணிக்குப்பிந்தாமல்) அத்தகைய குழுவின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) நியமனப் பத்திரமொன்று அல்லது நியமனப்பத்திரங்கள், நிராகரிக்கப்பட்டதன்பின்னர், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினது அல்லது ஒரு சுயேச்சைக் குழுவினது வேட்பாளர்கள் மாத்திரம் தேர்தலுக்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டோராக இருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரானவர், அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாக, எந்த வேட்பாளர்களுடைய பெயர்கள் அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படுகின்றனவோ அந்த வேட்பாளர்களுள் எவரை மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் அத்துடன் அந்த உள்ளூரதிகார சபையின்

வேறு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை முடிவுசெய்வதற்காக, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரை அழைத்தல் வேண்டும். அத்தகைய செயலாளர், அல்லது குழுத்தலைவர், தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தமது முடிவைத் தெரிவித்தால் தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய முடிவில் முறையே குறித்துரைக்கப்பட்டவர்களான வேட்பாளர்களை மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் உள்ளூராதிகார சபையின் ஏனைய உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்துதல் வேண்டும். மறுபுறத்தில், அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அவரது முடிவை அறிவிக்கத் தவறினால்—

(i) எந்த வேட்பாளர்களுடைய பெயர்கள் அத்தகைய நியமனப்பத்திரத்தில் முதலாவதாகவும், இரண்டாவதாக காணப்படுகின்றனவோ, அந்த வேட்பாளர்கள் முறையே மாநகர முதல்வராகவும், பிரதி மாநகர முதல்வராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்களென வெளிப்படுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) அந்த உள்ளூராதிகார சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமளவாக எந்த ஒழுங்கு வரிசையில் வேட்பாளர்களது பெயர்கள் அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படுகின்றனவோ, அந்த ஒழுங்குவரிசையிலுள்ளவர்களான அத்தகைய வேறு வேட்பாளர்கள், உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என வெளிப்படுத்தல் வேண்டும். ".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

" (ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றினதும், அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினதும் சிங்கள "அகரவரிசைப்படி (வேட்பாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறாக) தரப்பட்டுள்ளவாறான" வேட்பாளர்களின் பெயர்களும் அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடர் எண்ணும் அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமும், அத்துடன் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில், " சுயேச்சை குழு " என்ற சொற்களும், வேறுபடுத்திக் காட்டும் இலக்கம் ஏதேனும் இருப்பின், அதுவும் ; " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "பதினான்கு நாட்களுக்குக் குறையாமலும், இருபத்தெட்டு நாட்களுக்கு மேற்படாமலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து கிழமைகளுக்குக் குறையாமலும் ஏழுகிழமைகளுக்கு மேற்படாமலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு "எந்த ஒழுங்கு வரிசையில் அவர்களது பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த ஒழுங்கு வரிசையில்" என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 39ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**13.** பிரிவு 39 (அ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அஞ்சல் மூலம் வாக்களித்தல்

39ஆ (1) உள்ளூராதிகார சபை எதற்குமான தேர்தலொன்றின் நோக்கத்துக்கென, இப்பிரிவின்கீழ் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்குரித்துடைய ஆளொருவர், அத்தகைய தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கலாமென்பதுடன், அவர் நேர்முகமாக வாக்களித்தலுமாகாது.

இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு முரணாக, தேர்தலொன்றில் நேர்முகமாக வாக்களிக்கும் ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) உள்ளூராதிகாரசபையொன்றுக்கான தேர்தலொன்றில் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று—

(அ) இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின், இலங்கை வான்படையின் உறுப்பினரொருவர் அல்லது பொலிசுத் திணைக்களத்திலுள்ள, இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையிலுள்ள, அஞ்சல் திணைக்களத்திலுள்ள, தொலைத்தொடர்புகள் திணைக்களத்திலுள்ள, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையிலுள்ள, அல்லது ஏதேனும் பிராந்திய போக்குவரத்துச்சபையிலுள்ள அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளரொருவர், அத்தகைய உறுப்பினராக, அலுவலராக அல்லது சேவையாளராக தொழில் செய்கின்ற

குறிப்பான சூழ்நிலை காரணமாக அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்துக்கு நேர்முகமாக வந்து வாக்களிக்க முடியாத

வராகவுள்ளார் அல்லது நேரடியாக வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியமுண்டு என்ற ஏதுவின்மேல், அந்த உறுப்பினரால் அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்படலாம், அத்துடன்

(ஆ) பகிரங்க சேவையிலுள்ள இலங்கை மத்திய வங்கியிலுள்ள, அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், தேர்தலுடன் தொடர்புபட்ட நோக்கமொன்றிற்காக வாக்கெடுப்புத் தேதியன்று, அவர் தொழில் செய்கின்ற குறிப்பான சூழ்நிலைகள் என்ற ஏதுவின் மீது அல்லது அந்நோக்கத்திற்கென அவர் தொழிலுக்கமர்த்தப்படக்கூடிய சாத்தியமுண்டு என்ற ஏதுவின்மீது, அந்த அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்படலாம் ; அத்துடன்

(இ) தேர்தலொன்றிற்கான வேட்பாளரொருவர், தாம் வேறோர் தேர்தல் இடப்பரப்பில் வேட்பாளராக நிற்கும் காரணத்தினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் தாம் நேரடியாக வக்களிக்க முடியாதவராயுள்ளார் அல்லது முடியாமல் போகும் சாத்தியம் உண்டு என்ற ஏதுவின்மீது, அந்த வேட்பாளரினால் செய்யப்படலாம்.

(3) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்மொன்று, தெரிவத்தாட்சி அலுவலருக்கு, 26 ஆம் பிரிவின் கீழான பெயர் நியமனம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்துநாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் பொருளளவில் ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள, ஒழுங்கு விதிகளால் அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்காக விண்ணப்மெதுவும், அவ் விண்ணப்பமானது, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ளது என தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திப்பட்டாலன்றி அவரால் அனுமதிக்கப்படுதலாகாது.

(5) தெரிவத்தாட்சி அலுவலர் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பங்களைத் தீர்மானித்து முடிவு செய்யும்நோக்கத்திற்கென, அந்நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தகவலெதனையும் அத்தகைய அலுவலருக்குக் கொடுக்கும்படி ஆளெவரையும் அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

(6) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்காக விண்ணப்பமொன்றின்மீதான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவானது எழுத்து மூலம் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றினை அனுமதிக்கும் அல்லது அனுமதிக்க மறுக்கும் தெரிவத்தாட்சி அலுவலரின் தீர்மானமானது இறுதியானதாதல் வேண்டும்.

(8) தேர்தலொன்றின் நோக்கத்திற்கென அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிப்பதற்கான விண்ணப்பமொன்று தெரிவத்தாட்சி அலுவலரொருவரால் அனுமதிக்கப்படுமிடத்து, விண்ணப்பகாரர் அத்தகைய நோக்கத்திற்கென, அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆளொருவராதல் வேண்டும்.

(9) தெரிவத்தாட்சி அலுவலரானவர் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட முகவரிக்கு—

(அ) வாக்குச் சீட்டொன்றையும்;

(ஆ) ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் படிவமொன்றையும்;

(இ) அஞ்சல் வாக்குச்சீட்டு உரிய முறையில் குறியிடப்பட்டுத் திருப்பி யனுப்பப்படும்பொழுது, அதனை உறைக்குள் இடுவதற்கான (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறையிலும் பார்க்கச் சிறியதும், "வாக்குச் சீட்டு உறை" என அடையாளமிடப் பட்டதும், அத்தகைய ஆளுக்கு வழங்கப்படும் அஞ்சல் வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்ட எண்ணைக் கொண்டதுமான உறையொன் றையும்; அத்துடன்

(ஈ) மேலே சொல்லப்பட்ட ஆவணங்களைத் திருப்பி அனுப்புவதற்கான உறையொன்றையும்,

சாத்தியமானளவு விரைவாக அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

(10) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆட்களால் பயன்படுத்தப்படவேண்டிய வாக்குச் சீட்டின் படிவமும், ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான படிவமும், அவை வழங்கப்படு வதற்கான நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய நட வடிக்கை முறைகளும் ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள ஒழுங்கு விதிகளுக்கிணங்கியனவாக இருத்தல் வேண்டும்.

(11) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுதற்குரிய ஆளொரு வருக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டொன்று இக் கட்டளைச் சட்டத்தில் "அஞ்சல் வாக்குச் சீட்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(12) எந்தத் தேர்தல் இடப்பரப்பில் தேர்தலொன்றிருக்கின்றதோ அந்த ஏதேனும் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக் காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆள் ஒவ்வொருவரி னதும், தேருநர் இடாப்பிலுள்ள பெயரையும், முகவரியையும், எண்ணை யும் குறித்துரைக்கும் (இக்கட்டளைச் சட்டத்தில் "அஞ்சல் வாக்காளர் நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிரலொன்றினை சாத்தியமான அளவு விரைவாகத் தயாரித்தல் வேண்டும். அத்தகைய நிரல் இச்சட்டத் திற்கான ஒன்பதாம் அட்டவணையில் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகளினால் அதற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தயா ரிக்கப்படுதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

வாக்கெடுப்பு நேரங்கள்.

"41. தேர்தல் இடப்பரப்பொன்றிற்கான தேர்தல் ஒவ் வொன்றினதும் வாக்கெடுப்பு 38 ஆம் பிரிவின்கீழ் அறி விப்பு மூலம் அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நாளன்று முற்பகல் 7 மணிக்குத் தொடங்கி அந் நாளன்று பிற்பகல் 4 மணிக்கு முடிவடைதல் வேண் டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் " அத்துடன் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும்" என்னும் சொற்கள் தொடங்கி அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" அதற்கு குறித்தொதுக்கப்பட்ட வேறுபடுத்திக் காட்டும் தொடர் இலக்கத்தையும், அத்துடன் உள்ளூராதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கென அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினதும் நியமனப் பத்திரத்தில் "காட்டப்பட்டுள்ளவாறு (வேட்பாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறான) சிங்களத்தில் " அகரவரிசையில் அமைந்த வேட்பாளர்களின் பெயர்களையும் அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கம் அத்துடன் அத்தகைய கட்சி அல்லது குழு ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் குறித்துரைக்கும் அறிவித்தலொன்றையும் ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் " அத்தகைய குழுவினை வேறுபடுத்திக்காட்டும் இலக்கத்துக்கெதிராக அது எழுதப்பட்டிருத்தல் வேண்டும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக " அத்தகைய குழுவின் வேறுபடுத்திக்காட்டும் இலக்கத்துக்கெதிராக அது எழுதப்பட்டும் இதனை உடனடுத்துக் கீழே தொடர்வரிசையில், உள்ளூராதிகார சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை மூன்றால் அதிகரித்துவரும் எண்ணிக்கைக்குச் சமனானவாறான அத்தகைய இலக்கமும் அல்லது இலக்கங்களும் எழுதப்பட்டுமிருத்தல் வேண்டும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " வாக்கெடுப்பு நடைபெற்ற வாக்கெடுப்பு நிலையத்துக்கான " என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவை உட்புகுத்தல்.

18. ஐம்பத்தொன்பதாம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு என்றாற்போல பயனுறுதலும் வேண்டும் :—

" வாக்கெண்ணும் அலுவலர்கள்.

59 அ. ஆணையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு அமைவாக, தேர்தல் இடப்பரப்பொன்றின் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் வாக்குகளை எண்ணுவதற்குப் பொறுப்பாக இருப்பதற்கென வாக்கெண்ணும் அலுவலர்களையும் அத்துடன் அத்தகைய வாக்கெண்ணும் அலுவலருக்கு அவரது கடமைகளைப் புரிவதில் உதவி செய்வதற்கென அவசியமான அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும் எழுதுவினைஞர்களையும் வேறு அலுவலர்களையும் நியமித்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனத்தை இல்லாதுமாக்கலாம்

(2) தெரிவத்தாட்சி அலுவலர், தகுந்ததென எண்ணின் வாக்கெண்ணும் அலுவலரொருவரின் கடமைகளைப் புரியலாம் என்பதுடன், வாக்கெண்ணும் அலுவலர் தொடர்பான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஏற்புடையனாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வாக்குகள் எண்ணப்படத் தொடங்கும் நேரத்தையும் இடத்தையும் பற்றிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்குகள் எண்ணப்படத் தொடங்கும் நேரத்தையும் வாக்கெண்ணும் நிலையங்களையும் அத்துடன் அத்தகைய நிலையம் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தையும் அல்லது நிலையங்களையும் பற்றிய" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

20. அறுபத்தோராம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

அஞ்சல் வாக்குச் சீட்டுகளை எண்ணுதல்.

"61. அ. ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் புறம்பான ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான வாக்கெண்ணும் நிலையங்களில் ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கிணங்க எண்ணப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஈ) அடையாளமிடப்படாத அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்த அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கப்பட்டதோ அந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு பற்றிய நிச்சயமின்மைக்காக வறிதான,";

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(6) வாக்கெண்ணும் அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியற்கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை சொற்களிலும் இலக்கங்களிலும் கொண்ட எழுத்திலான கூற்றொன்றையும் அத்துடன் அத்தகைய கட்சி, அல்லது குழு ஒவ்வொன்றினதும் பெயர்

குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுட்டிக் காட்டப்பட்ட முந்துரிமையின் எண்ணிக்கையை சொற்களிலும் இலக்கங்களிலும் கொண்ட புறம்பான கூற்றொன்றையும் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு கூற்றும் வாக்கெண்ணும் அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, அவரது உதவியாளர்களுள் ஒருவராலும் எழுதுநர்களுள் ஒருவராலும் அங்கு சமுகமளித்திருந்து கையொப்பமிட விரும்புகின்றவர்களான, ஏதேனும் கட்சியின் அல்லது குழுவின் முகவர்களுள் ஒருவராலும் சாட்சிகளாக ஒப்பமிடப்படுதலும் வேண்டும்."; அத்துடன்

(3) ஆறும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் :—

"(6 அ) வாக்காளர் ஒருவரால் அவரது வாக்குச்சீட்டில், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியால் அல்லது சுயேட்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு, சுட்டிக்காட்டப்பட்ட முந்துரிமைகள், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு அத்தகைய வாக்காளர் முந்துரிமையை சுட்டிக்காட்டியிருந்தால், கணக்கிலெடுக்கப்படுதலாகாது.

(6 ஆ) வாக்காளரொருவர் அவரது வாக்குச் சீட்டில், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முந்துரிமையை சுட்டிக்காட்டியிருக்குமிடத்து, அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ள எல்லா முந்துரிமைகளும் ஒரு முந்துரிமையாகவே கணக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

(6இ) வாக்காளரொருவரால், ஏதேனும் முந்துரிமை எந்த வேட்பாளருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென நிச்சயமின்லாததன் காரணமாக வறிதாக்கப்பட்ட அவரது வாக்குச் சீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏதேனும் முந்துரிமை நிராகரிக்கப்படுதல் வேண்டும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அதன் (1) ஆம் உட்பிரிவில் அதன் ஏதேனும் வாக்களிப்பு நிலையம்" என்னும் சொற்களை விட்டு விடுவதன் மூலமும், " அத்துடன்

ii) அதன் (2) ஆம் உட்பிரிவில், "வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்று" என்னும் சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்.

என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாக்குகளினதும் அத்தகைய ஒவ்வொரு கட்சியாலும் அல்லது குழுவாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர் ஒவ்வொருவராலும் பெறப்பட்ட முந்துரிமைகளினதும் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்று", என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம் :—

"(ஆ) தெரிவத்தாட்சி அலுவலர், அளிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கைகளும், முந்துரிமைகளும் பற்றிய கூற்றுக்களிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியாலும் அல்லது குழுவாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுட்டிக்காட்டப்பட முந்துரிமைகளின் எண்ணிக்கையையும் தீர்மானித்தல் வேண்டும்.

(இ) தெரிவத்தாட்சி அலுவலர், (2) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளின்பின், அங்கீகரிக்கப்பட்ட எந்த அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஆகக்கூடுதலான எண்ணிக்கைகளையுடைய வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளனவோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரை அந்தக் கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து (2) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) என்னும் பந்திகளின்கீழ் தெரிவுசெய்யப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களுள் எந்த உறுப்பினர்கள் முறையே மாநகர முதல்வராகவும் மாநகரப் பிரதி முதல்வராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரென வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதனைத் தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்படவேண்டிய ஒரு காலப்பகுதிக்குள் முடிவு செய்யுமாறு கோருதல் வேண்டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுத் தலைவர் அவரது முடிபைத் தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தால், அத்தகைய முடிபில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் முறையே மாநகர முதல்வராகவும், மாநகர பிரதி முதல்வராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரென வெளிப்படுத்துதல் வேண்டும் மறுபுறத்தில், அத்தகைய செயலாளர் அல்லது குழுத் தலைவர், அவரது முடிபை, தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவிக்கத் தவறினால், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து முறையே ஆகக் கூடுதலானவையும், அடுத்தபடியாக ஆகக்கூடுதலானவையுமான எண்ணிக்கையிலான முந்துரிமைகளைப் பெற்றுள்ளவர்களும், தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென வெளிப்படுத்தப்பட்டவர்களுமான உறுப்பினர்கள் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனரென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "உள்ளூராதிகாரசபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட இருக்கும், மாநகர முதல்வரும், பிரதி மாநகர முதல்வரும் தவிர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்த உள்ளூராதிகார சபைக்கான அத்தேர்தலில் தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரண்டால் குறைத்து வரும் எண்ணிக்கையால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :—

"(ஈ) (பந்தி (அ) என்பதன்கீழ் தகைமையிழந்த கட்சிகளையும் குழுக்களையும் தவிர) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாலும் சுயேச்சைக் குழுவாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, ஆகக்கூடிய எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்ற கட்சியுடன் அல்லது குழுவுடன் தொடங்கி, அதன் விளைவெண்ணிக்கையால் பிரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுள் ஒவ்வொருவராலும் பெறப்பட்ட முந்துரிமையின் எண்ணிக்கைக்கு இணங்க, அத்தகைய ஒவ்வொரு கட்சியிலிருந்தும் அல்லது குழுவிலிருந்தும் அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெறப்பட்ட வாக்குகளை விளைவெண்ணிக்கையால் பிரித்துவரும் முழு எண்ணிக்கைக்குச் சமனுகின்றவாறுன அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் (ஆகக்கூடுதல் எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்ற வேட்பாளர் முதலாவது தெரிவுசெய்யப்பட்டவரென வெளிப்படுத்தப்படுகின்றுர், அடுத்து ஆகக்கூடுதல் எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்ற வேட்பாளர் அடுத்து தெரிவுசெய்யப்பட்டதென வெளிப்படுத்தப்படுகின்றூர் என்றிவ்வாறுக தெரிவுசெய்யப்பட்டவரென வெளிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய பிரித்தலின்பின் எவையேனும் வாக்குகள் எஞ்சியிருப்பின் அவை அவசியமாளுல் (உ) என்னும் பந்தியின் கீழ் கையாளப்படுதல் வேண்டும். ஆகக்கூடுதல் எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழு, அத்தகைய பிரித்தலின்பின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களென வெளிப்படுத்திக்கொள்வதற்கு அது உரித்துடையதாயிருக்கின்ற எண்ணிக்கையினரான வேட்பாளர்களுடன் சேர்த்து மேலதிகமாக இரண்டு வேட்பாளர்களை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களென வெளிப்படுத்திக்கொள்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) என்பதில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உறுப்பினர்களின் தெரிவு வெளிப்படுத்தப்பட்ட பின்னர், ஓர் உறுப்பினரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோ தெரிவு செய்யப்பட்டதாக இன்னமும் வெளிப்படுத்தப்படவேண்டியிருக்

குமிடத்து, அப்பந்தியின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை யின் பின், அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் வரவுக்கு (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வாக்குகளின் மீதத்தின் மேலும், (ஈ) என்னும் பந்தியின்கீழ் எந்தக் கட்சி யின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் எவருமே தெரிவு செய்யப்படாதிருக்கின்றனரோ அந்தக் கட்சியால் அல்லது குழு வால் பெறப்பட்ட வாக்குகளின் மேலும், ஆகக்கூடுதலான அல் லது அடுத்தபடியாக ஆகக்கூடுதலான எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்றிருப்பவரும், அத்தகைய ஆகக்கூடுத லான வாக்குகளைப் பெற்ற கட்சியால் பெயர் குறித்து நியமிக் கப்பட்டவருமான வேட்பாளர், உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்டு, இவ்வாறாக தெரிவு செய்யப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டதாக வெளிப்படுத்தப்படும்வரை அத்தகைய உறுப்பினர் அல்லது அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**(5)** அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம் :—

"(ஊ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ், அங்கீ கரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அதனால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுள் ஒருவர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவரென வெளிப் படுத்துவதற்கு உரித்துடையதாகவிருந்து, ஆனால் அது பெயர் குறித்து நியமித்த வேட்பாளர்களுள் ஒருவராவது அல்லது அது சமர்ப்பித்த நியமனப்பத்திரத்தில் எஞ்சியிருக்கும் வேட் பாளர்களுள் ஒருவராவது ஏதேனும் முந்துரிமையைப் பெற்றிரா தவிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எந்த வேட் பாளர் அல்லது அது சமர்ப்பித்த நியமனப்பத்திரத்தில் எஞ்சி யிருக்கும் எந்த வேட்பாளர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டாரென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதனைத் தெரி வத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்படவேண்டிய காலத்துக் குள் முடிவுசெய்யுமாறு அத்தகைய அரசியற் கட்சியின் செயலா ளரை அல்லது அத்தகைய குழுவின் தலைவரைக் கோருதல் வேண் டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர் அவரது முடிபை தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தால், தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய முடிபில் குறித்துரைக்கப் பட்ட வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டாரென வெளிப்படுத்து தல் வேண்டும். மறுபுறத்தில் அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர் அவரது முடிபை தெரிவத்தாட்சி அலுவல ரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி

அலுவலருக்குத் தெரிவிக்கத் தவறினால், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தில் எந்த வேட்பாளரின் பெயர் அடுத்ததாகக் காணப்படுகின்றதோ அந்த வேட்பாளர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டாரென வெளிப்படுத்துதல் வேண்டும்".

(5) அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்,

"(4) இப்பிரிவினதும் 65அ என்னும் பிரிவினதும் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் உள்ளூராதிகார சபையொன்றுக்கான தேர்தலுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் பேர்குறித்து நியமிக்கப்படுமிடத்து, அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிடமிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிடமிருந்து உள்ளூராதிகாரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அத்தகைய தேர்தலில் சம எண்ணிக்கையான முந்துரிமைகளைப் பெற்றிருந்து மேலதிக முந்துரிமையொன்றைச் சேர்த்துக் கொள்ளுதல் அத்தகைய உள்ளூராதிகார சபையின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்பட அத்தகைய வேட்பாளர்களுள் ஒருவருக்கு உரித்தளிக்கப்படுமிடத்து அல்லது அத்தகைய உள்ளூராதிகாரசபையின் விடயத்துக்கேற்றவாறு மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டிருப்பவராக வெளிப்படுத்தப்படுவதற்கு அத்தகைய உறுப்பினருள் ஒருவருக்கு உரித்தளிக்குமிடத்து, எந்த வேட்பாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அத்தகைய மேலதிக முந்துரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும் என்ற தீர்மானம் தெரிவத்தாட்சி அலுவலர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய முறையில் அவரது முன்னிலையில் சீட்டிழுப்புமூலம் செய்யப்படுதல் வேண்டும்"

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1), (2), (3), (4), (5) என்னும் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் :—

(1) மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி, இறப்பின் அல்லது பதவி துறப்பின் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் வறிதானால் அம்மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவர்களான, அவ் உள்ளூர் அதிகாரசபையின் எந்த உறுப்பினர்கள் விடயத்துக்கேற்ப, மாநகரசபை முதல்வராகவோ பிரதி மாநகரசபை முதல்வராகவோ தெரிவு செய்யப்பட்டவராக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதனை தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்

துரைக்கப்படவேண்டிய ஒரு காலப்பகுதிக்குள் முடிவு செய்யுமாறு, பதவியை வறிதாக்கும் மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் எந்தக் கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்தவரோ அந்தக் கட்சியின் செயலாளரை அல்லது குழுவின் தலைவரை கோருதல் வேண்டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர், அவரது முடிவைத் தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தால், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய முடிவில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர் மாநகர முதல்வராகவோ பிரதி மாநகர முதல்வராகவோ தெரிவுசெய்யப்பட்டாரென வெளிப்படுத்துதல் வேண்டும். மறுபுறத்தில், அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர் அவரது முடிவை குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவிக்க தவறினால், தெரிவத்தாட்சி அலுவலர்—

(அ) வெற்றிடம், மாநகர முதல்வரது பதவியிலிருக்குமிடத்து, ஆக கூடுதல் எண்ணிக்கையினதான முன்னுரிமையைப் பெற்றுள்ளவரான, அத்தகைய கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்த உள்ளூரதிகாரசபை உறுப்பினர் மாநகர முதல்வராக; அல்லது

(ஆ) வெற்றிடம் பிரதி மாநகர முதல்வரது பதவியிலிருக்குமிடத்து, ஆகக்கூடுதல் எண்ணிக்கையினதான விருப்புத் தெரிவைப் பெற்றுள்ளவரான (மாநகர முதல்வரை விட) அத்தகைய கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்த உள்ளூரதிகாரசபை உறுப்பினர், பிரதி மாநகர முதல்வராக

அவ் உள்ளூர் அதிகாரசபைக்கான உறுப்பினர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டவரென வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) உறுப்பினரொருவரின் பதவி, இறப்பு அல்லது பதவி துறப்பு காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக வறிதாகுமாயின், மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அவ் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தகவுள்ள ஆளொருவரை, தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்படவேண்டிய காலப்பகுதிக்குள் பெயர் குறித்து நியமிக்கும்படி, பதவியை வறிதாக்கும் உறுப்பினர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவராகவிருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது குழுவின் தலைவரைக் கோருதல் வேண்டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென தகவுள்ள ஆளொரு

வரைப் பெயர் குறித்து நியமித்து, அத்தகைய நியமனம், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளினால், அரசியலமைப்பிற்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் விடயத்திற்கேற்ப எடுத்து ஒப்பமிடப்பட்ட அல்லது செய்ய ஒப்பமிடப்பட்ட, விடயத்திற்கேற்ப, சத்தியத்துடன் அல்லது உறுதியுரையுடன் சேர்த்தனுப்பப்படின், தெரிவத்தாட்சி அலுவலரானவர், அத்தகைய ஆள் அவ் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்பட்டாரென வெளிப்படுத்துதல் வேண்டும். மறுபுறத்தில் அத்தகைய செயலாளர் அல்லது குழுவின் தலைவர் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பெயர் குறித்த நியமனமொன்றை செய்யத் தவறினால் தெரிவத்தாட்சி அலுவலர், அக்கட்சியால் அல்லது குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்திலிருந்து, அவ் உள்ளூரதிகார சபைக்கான உறுப்பினர்களின் தேர்தலில், அக்கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து அவ் உள்ளூரதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களுள் கடைசியானவரை அடுத்து ஆகக்கூடுதல் எண்ணிக்கையிலான முந்துரிமைகளைப் பெற்றுள்ள வேட்பாளர் அக்கட்சியினால் அல்லது குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்திலிருந்து உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவரென வெளிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய நியமனப்பத்திரத்தில், எவ்வேட்பாளர்களின் பெயர்கள் இருந்தனவோ அவ்வேட்பாளர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அத்தகைய நியமனப் பத்திரத்தில் எவ்வேட்பாளர்களின் பெயர்கள் எஞ்சியுள்ளனவோ அவ்வேட்பாளர்கள் எவரும் எவையேனும் முந்துரிமைகளைப் பெறாதுள்ளவிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் உடனடியாக ஆணையாளரின் மூலம் அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும். அமைச்சர் அவ்வாறு செய்வது உசிதமானதென்று எக்கட்டத்திலும் கருதுமிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்தலொன்றை நடாத்துமாறு ஆணையாளரைப் பணிக்கலாம். அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், கடைசி முற்போந்த பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும் வரையில் மட்டுமே பதவிவகித்தல் வேண்டும் ;

(2) அப்பிரிவின் (6), (7), (8), (9) ஆகிய உட்பிரிவுகளை முறையே அப்பிரிவின் (3), (4), (5), (6) ஆகிய உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன்மூலம் ; அத்துடன்

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (3) ஆம் உட்பிரிவில், "(5) ஆம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம்.

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (4) ஆம் உட்பிரிவினை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

" (4) இரண்டாம் உட்பிரிவின்மூலமான தேர்தலொன்று நடாத்தப்படும்போது ஏதேனும் உள்ளூரதிகார சபையால் முதல்வரினதும் பிரதி முதல்வரினதும் பதவிகள் வெற்றாகவிருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தேர்தலின் பின்னர் அத்தகைய உறுப்பினர்களுள் எவர் முதல்வராக அல்லது பிரதி முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதை முடிவுசெய்வதற்காக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய உள்ளூரதிகார சபையில் ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்ட சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரைக் கோருதல் வேண்டும்; அத்துடன், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதன்பின்னர் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்." ; அத்துடன்

(5) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (5) ஆம் உட்பிரிவில்—

(அ) "ஐந்தாம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்பையும் ; அத்துடன்

(ஆ) "ஏழாம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "(4) ஆம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்பையும் இடுவதன்மூலம் ;

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில்—

(அ) "ஏழாம், எட்டாம் உட்பிரிவுகள்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "(4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகள்" என்னும் சொல்லமைப்பையும் ; அத்துடன்

(ஆ) "ஐந்தாம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவு" என்னும் சொல்லமைப்பையும்

இடுவதன்மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவானது "எவ்வாளுக்காக அவர் வாக்களித்துள்ளாரென்பதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவ்வங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களித்துள்ளாரென்பதை அல்லது எவ்வேட்பாளருக்காக அவர் முந்துரிமையொன்றைக் குறித்துக் காட்டியுள்ளாரென்பதை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 75அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

26. பின்வரும் பிரிவானது 75 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*குழுத் தலைவர்.*

75அ. சுயேச்சைக் குழு ஒன்றன் குழுத் தலைவராகப் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் ஆள்—

(அ) உள்ளூராதிகார சபையொன்றுக்கான தேர்தலொன்று முடிவுறுகின்றபோது இறக்கின்றவிடத்து, அந்தச் சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரத்தில் விடயத்துக்கேற்றவாறு எந்த வேட்பாளரின் பெயர் முதலாவதாக அல்லது இரண்டாவதாகத் தோன்றுகின்றதோ அந்த வேட்பாளர் அச்சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) உள்ளூராதிகார சபையொன்றுக்கான தேர்தலொன்றன் பின்னர் இறக்கின்றவிடத்து, அந்தச் சுயேச்சைக் குழுவிலிருந்து அந்த உள்ளூராதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட எந்த உறுப்பினர் அந்தத் தேர்தலில் ஆகக் கூடிய எண்ணிக்கையிலான முன்னுரிமைகளைப் பெற்றாரோ அந்த உறுப்பினர் அந்தக் குழுவின் குழுத் தலைவராகக் கருதப்படுதல் வேண்டும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

“(ஊ) வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் குறியிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை வேண்டுமென்று வெளிக்காட்டுகின்ற ; அல்லது” ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

“(ஓ) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப்படுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில், அல்லது ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையில் வேண்டுமென்று பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற ; அல்லது

(ஔ) ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் கருத்தெல்லையினுள் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது ஏதேனும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையை அல்லது ஏதேனும் மேலுறையை அல்லது வாக்குச் சீட்டு உறையை, முறையான அதிகாரமின்றி அழிக்கின்ற, எடுக்கின்ற, திறக்கின்ற அல்லது வேறு வகையில் குழப்புகின்ற அல்லது அதனோடு தலையிடுகின்ற”

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

"அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று தொடர்பாக அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக இருப்பதற்கென அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் எழுத்தில் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;"

அத்தகைய அதிகாரமளித்தல், அத்தகைய செயலாளரினால் எந்த இடப்பாப்பு தொடர்பாக தேர்தல் நடாத்தப்பட்டுள்ளதோ அந்த தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு நியமனகாலம் தொடங்குவதற்கு முன்னர் குறைந்தது எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்குள் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்.

(2) "ஆணையாளர்" என்பது, வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

"ஆணையாளர்" என்பது, தேர்தல்கள் ஆணையாளர் என்று பொருள்படும்; அத்துடன்

(3) "தேர்தல்கள் அலுவலர்" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, "அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக, வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றாக உள்ள கட்சி" என்னும் சொற்களிலிருந்து "இத்தால் பெயர் குறித்து நியமிக்கின்றது." என்னும் சொற்கள்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக, வேட்பாளர்களின் சுயேச்சைக்குழுவொன்றாக உள்ள (சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில்) ............................ என்பவர் இதன் குழுத்தலைவராக உள்ளார்) .............. கட்சியானது .............. மாநகர சபையின்/நகரசபையின்/பிரதேச சபையின் உறுப்பினர்களின் தேர்தலுக்கான வேட்பாளர்களால் பின்வரும் ஆட்களை இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை "புள்ளியொன்றை இடுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புள்ளியொன்றை இடுதல் வேண்டும். அதன்பின்னர் அவர், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களிடையேயிருந்து மூன்றுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்கான அவரது முந்துரிமைகளை, அத்தகைய ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்துரைக்கப்பட்ட தொடரிலக்கத்தை நேரொத்த தொடரிலக்கத்தைக் கொண்ட கூட்டில் வாக்குச்சீட்டுப்பத்திரத்தினடியில் (X என்ற) புள்ளடியொன்றை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 3 ஆம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

## 3 ஆம் அட்டவணை
## வாக்குச்சீட்டின் முன்பக்க மாதிரி

அடியிதழ் இல.
குறிப்பு
வாக்குச்சீட்டின் பின்புறத்திலுள்ள இலக்கத்தை நேரொத்த இலக்கமொன்றை அடியிதழ் கொண்டிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினதும் பெயர்களும், "சுயேச்சைக் குழு" என்னும் சொற்களும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| 'அ' கட்சி | * |
| 'ஆ' கட்சி , | * |
| 'இ' கட்சி | * |
| "சுயேச்சைக் குழு" 1 | * |
| "சுயேச்சைக் குழு" 2 | * |
| "சுயேச்சைக் குழு" 3 | * |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | | |

* ஒவ்வொரு கட்சியினதும் அல்லது குழுவினதும் சின்னம்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான எட்டாம் அட்டவணையானது, அந்த அட்டவணையிலுள்ள 1, 2, 3, 4 ஆகிய விடயங்களை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்திற்கான எட்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான எட்டாம் அட்டவணையை அடுத்து பின்வரும் அட்டவணையானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச் சட்டவாக்கத்தின் ஒன்பதாம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும் :— *முதன்மைச் சட்டவாக்கத்தில் ஒன்பதாம் அட்டவணையை உட்புகுத்துதல்.*

### ஒன்பதாம் அட்டவணை

### ஒழுங்கு விதிகள் (பிரிவு 39ஆ)

1. இந்த ஒழுங்குவிதிகள் 1987 ஆம் ஆண்டின் அஞ்சல் வாக்காளர் (அபிவிருத்திச்சபைத் தேர்தல்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

பொருள் கோடல்.

2. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"வழங்குகை" என்பது ஆரம்பத்தில் வழங்கப்பட்டதும் அதை அடுத்துப் பின்னராக வழங்கப்பட்டதும் ஆன எதனையும் உள்ளடக்கும்;

"அஞ்சல் வாக்குச்சீட்டு" என்பது ஓர் அஞ்சல் வாக்காளருக்கு வழங்கப்பட்ட ஒரு வாக்குச்சீட்டு எனப் பொருளாகும்;

"அஞ்சல் வாக்காளர்" என்பது, தேர்தலொன்று தொடர்பில், அத்தேர்தலின் நோக்கத்துக்காக ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையவரான ஆளொருவர் எனப் பொருளாகும்;

"அட்டவணை" என்பது, இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை எனப் பொருளாகும்;

"கட்டளைச்சட்டம்" என்பது உள்ளூராதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் எனப் பொருளாகும்.

ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்.

3. ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று பொருளளவில் அட்டவணையிலுள்ள "அ" என்னும் படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும்.

அஞ்சல் வாக்காளரின் பதிவேடும் திரலும்.

4. (1) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கட்டளைச் சட்டத்தின்கீழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் வைத்திருக்கப்படும் அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடும் திரலும் வசதியானதென அவருக்குத் தோன்றுகின்ற அத்தகைய படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும் என்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான பாகங்களில் வைத்திருக்கவும் படலாம்.

(2) ஓர் அஞ்சல் வாக்காளரின் வாக்குச்சீட்டானது எம்முகவரிக்கு அனுப்பப்படவேண்டுமோ அம்முகவரி அஞ்சல் வாக்காளர் திரலில் அவரது பெயருக்கெதிரே குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. அஞ்சல் வாக்காளர், திரலிலுள்ள அல்லது அத்தகைய திரலின் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள பெயர்கள் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. அஞ்சல் வாக்காளர் திரல் தயாரிக்கப்பட்டவுடன் தெரிவத்தாட்சி அலுவலர், அவரது அலுவலகத்தில் பார்வையிடுவதற்குக் கிடைக்கச் செய்வதற்காகப் பிரதி ஒன்றைத் தயாரிப்பதன் மூலம் அதை வெளியிடுதல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டின் படிவம்.

5. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது அஞ்சல் வாக்காளர்களல்லாத வாக்காளர்களுக்கு ஒப்படைக்கப்படும் வாக்குச்சீட்டுகளிலிருந்து வேறுபிரித்தறிய முடியாததாயும் அதே படிவத்திலானதாயும் இருத்தல் வேண்டும்.

**ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம்.**

6. ஓர் அஞ்சல் வாக்காளருக்கு அவரின் அஞ்சல் வாக்குச்சீட்டுடன் அனுப்பப்படும் ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவமானது பொருளளவில் அட்டவணையிலுள்ள "ஆ" என்னும் படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும்.

**எழுதுவினைஞர்களை நியமித்தல்.**

7. அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளில் எழுதுவினைஞர்களாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவுவதற்காக ஆட்கள் நியமிக்கப்படலாம் :

ஆயின், தேர்தலில் அல்லது தேர்தல் சம்பந்தமாக வேட்பாளரொருவரால் அல்லது அவர்சார்பாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும் அவ்வாறு நியமிக்கப்படுதலாகாது.

**அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகையிலும் பெறுகையிலும் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவரான ஆட்கள்.**

8. (1) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளில்—

(அ) தெரிவத்தாட்சி அலுவலரும் அவரது எழுதுவினைஞர்களும்,

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரும் அல்லது குழுத்தலைவர் ஒருவரும்,

(இ) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரால் அல்லது குழுத்தலைவரொருவரால் அவரது இடத்தில் வருகை தரவென நியமிக்கப்பட்ட ஆளொருவரும், அத்துடன்

(ஈ) இந்த ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் முகவர்களும்

தவிர்ந்த ஆளெவரும் சமுகமாயிருத்தல் கூடாது.

(2) அஞ்சல் வாக்குச்சீட்டுகள் உடன்நிகழ்வாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளாக வழங்குகை செய்யப்படவுள்ளவிடத்து, ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் விடயத்திலும் எவ்வகையிலேனும், அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கை ஒரேயளவினதாக இருக்கும்படியாக, அத்தகைய தொகுதிகளின் எண்ணிக்கையை விஞ்சாது நியமிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலரால் அவர் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான எண்ணிக்கைவரை ஒரு முகவரை அல்லது அதற்கு மேற்பட்ட முகவர்களை, ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் அல்லது குழுத்தலைவரும் நியமிக்கலாம்.

(3) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு இந்த ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், முகவரிகளையும் எடுத்துக்கூறி, நியமனம் பற்றிய அறிவித்தல் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) முகவரொருவர் இறந்தால் அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியற்றவராகவரின், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் அவரின் இடத்துக்கு இன்னொரு முகவரை நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட முகவரின் பெயரும், முகவரியும் பற்றிய எழுத்திலான அறிவித்தலைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்தலும் வேண்டும்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் செய்யப்படுவதற்குப் பதிலாக நியமனப் பத்திரத்தில் பெயர் காணப்படுகின்ற வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் முறையாக அதிகாரமளிக்கப்படின், அவரினால் முகவர்கள் நியமிக்கப்படலாமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவர்களின் நியமனம் பற்றிய அறிவித்தல்கள் அவரினால் கொடுக்கவும் படலாம்.

(6) இந்த ஒழுங்குவிதிகளில் முகவர்கள் பற்றிய குறிப்பீடுகள் எம்முகவர்களின் நியமனங்கள் முறைப்படி செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்டுள்ளனவோ அம்முகவர்களுக்கான குறிப்பீடுகளெனவும், இந்த ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட முகவர்களின் விடயத்தில் தெரிவத்தாட்சி அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவரான அம்முகவர்கள் பற்றிய குறிப்பீடுகளெனவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் அல்லது குழுத்தலைவரொருவர், முகவர் எவரேனும் நியமிக்கப்பட்டிருப்பின் அவர் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கக்கூடியதான ஏதேனும் செயலை அல்லது காரியத்தைத் தானே செய்யலாம், அல்லது அத்தகைய ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதில் அவரது முகவருக்கு உதவலாம்.

(8) இந்த ஒழுங்குவிதிகளில் ஏதேனும் செயல் அல்லது காரியம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் அல்லது அவர்களது முகவர்களின் முன்னிலையில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, மற்றும்படி செயல் அல்லது காரியம் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டிருப்பின், அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் வருகைதராமையானது செய்யப்பட்ட செயலை அல்லது காரியத்தைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது.

இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை

9. (1) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளில் வருகைதரும் ஒவ்வோர் ஆளும் அத்தகைய வாக்குச்சீட்டுகளின் வழங்குகைக்கு முன்னர் பொருளளவில் 'இ' என்னும் அட்டவணையிலுள்ள படிவத்தில் இரகசியம் பேணுதல் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான வெளிப்படுத்துகையொன்று தெரிவத்தாட்சி அலுவலரால் சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வேறெவரேனும் ஆளால் அது செய்யப்படும்போது, தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்படுதலும் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகையுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் வருகை தரும் ஆள் ஒவ்வொருவரும் வாக்களிப்பில் இரகசியம் பேணுதலும் அது பேணப்படுவதில் உதவுதலும் வேண்டுமென்பதுடன்—

(அ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நோக்கத்துக்காகவன்றி, அஞ்சல் வாக்குச்சீட்டுக்களில் பொறிக்கப்பட்ட அலுவலகமுறையான குறியீடுபற்றி அந்நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர் தெரியப்படுத்தலுமாகாது ; அல்லது

(ஆ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நோக்கத்துக்காகவன்றி, அஞ்சல் வாக்குச்சீட்டொன்றின் பின்பக்கத்திலுள்ள இலக்கம் பற்றி அந்நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற ஏதேனும் தகவலை எவரேனுமாளுக்கு எந்நேரத்திலேனும் தெரியப்படுத்தலுமாகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகையான மறியத்தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

**வாக்குச்சீட்டுகளின் வழங்குகை பற்றிய அறிவித்தல்.**

10. (1) தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தலொன்றின் நியமன காலப் பகுதியினது கடைசி நாளின்பின்னர் பத்து நாட்களுக்குப் பிந்தாமல், அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை அவர் வழங்கவுள்ள நேரத்தையும் இடத்தையும் அத்துடன் சொல்லப்பட்ட வழங்குகையில் வருகைதருவதற்கு 8 ஆம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழ் அவர் நியமிக்கக் கூடியவாறான முகவர்களின் எண்ணிக்கையையும் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் குழுத்தலைவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) அடுத்துப் பின்னராக ஏதேனும் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை செய்யப்படுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் எந்நேரத்தில் அத்துடன் எவ்விடத்தில் அத்தகையவாறான அடுத்துப்பின்னரான வழங்குகையைச் செய்யவுள்ளாரோ அந்நேரத்தையும் அவ்விடத்தையும் அத்துடன் வழங்குகையில் வருகை தருவதற்கென 8 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் அவர் நியமிக்கக்கூடியவாறான முகவர்களின் எண்ணிக்கையையும் செயல் முறைக்குகந்தவரை விரைவாக ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் குழுத்தலைவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

**அஞ்சல் வாக்குச் சீட்டுகளில அலுவலகமுறையான குறியீடு பொறிக்கப்படுதல்.**

11. (1) ஒவ்வோர் அஞ்சல் வாக்காளருக்கும் வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டு, அதன் பின்பக்கத்தில் அலுவலக முறையான குறியீட்டினால் பொறிக்கப்படுதல் அல்லது துளைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வாக்காளரின் இலக்கமும் பெயரும் கூப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டின் அடியிதழிலும் அத்தகைய வாக்காளரின் இலக்கம் குறிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய வாக்குச்சீட்டொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பதற்காக, அவருக்கு வழங்கப்பட்ட குறிப்பான வாக்

குச்சீட்டைக் காண்பியாது அஞ்சல் வாக்காளர் நிரலில் அத்தகைய வாக்காளரின் இலக்கத்திற்கெதிராகக் குறியீடொன்று இடப்படுதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டின் அடியிதழில் குறிப்பிடப்படவுள்ள அஞ்சல் வாக்காளரின் இலக்கமானது, அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள அத்தகைய வாக்காளரின் இலக்கமாதல் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்காளரொருவருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டுள்ள இலக்கமானது, அத்தகைய வாக்காளருக்கு அனுப்பப்பட்ட அடையாளம்பற்றிய வெளிப்படுத்துகைப் படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட இலக்கமானது இதனகத்துப்பின்னர் "ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்க" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

*அஞ்சல் வாக்குச்சீட்டை வழங்க மறுத்தல்.*

12. அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள இரண்டு பதிவீடுகள் ஒரே அஞ்சல் வாக்காளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன எனத் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் திருப்திப்படுமிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகளை, அவ்வாக்காளர் தொடர்பில் அவர் வழங்குதலாகாது.

*"வாக்குச்சீட்டு உறையின்மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம்" என்ற சொல்லமைப்பினதும், "மேலுறை" என்ற சொல்லமைப்பினதும் பொருள் கோடல்.*

13. (1) வாக்குச்சீட்டுறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, இவ்வொழுங்குவிதிகளில் "வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

(2) முறைப்படி குறியீடு செய்யப்பட்டதும் வாக்குச்சீட்டு உறையினுள் வைக்கப்பட்டதுமான அஞ்சல் வாக்குச்சீட்டினதும், முறைப்படி நிரப்பப்பட்ட ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகைப் படிவத்தினதும் திருப்பி அனுப்புகைக்கான உறையானது இவ்வொழுங்கு விதிகளில் "மேலுறை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

*அஞ்சல் வாக்காளருக்கு முகவரியிடப்பட்ட உறைகளை அஞ்சல் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல்.*

14. அஞ்சல் வாக்காளர்களுக்கு முகவரியிடப்பட்ட எல்லா உறைகளும் எண்ணப்படுதல் வேண்டுமென்பதுடன், அருகேயுள்ள அஞ்சல் அலுவலகத்திற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால் உடனடியாக ஒப்படைக்கப்படுதலும் வேண்டும். அத்துடன், அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட உறைகளின் எண்ணிக்கையைக் குறிப்பதான தெரிவத்தாட்சி அலுவலரினால் அளிக்கப்படும் பற்றுச்சீட்டுப் படிவமொன்றை அஞ்சலதிபர், அஞ்சல் அலுவலகத்தின் தேதி முத்திரை கொண்டு பொறித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறைகள் எவ்வாட்களுக்கு முகவரியிடப்பட்டுள்ளனவோ, அவ்வாட்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்காக அவற்றை உடனடியாக அனுப்புதலும் வேண்டும்.

*அஞ்சல் வாக்காளர் நிரலையும் அடியிதழ்களையும் இலச்சினையிடுதல்.*

15. (1) தெரிவத்தாட்சி அலுவலரானவர், அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை முடிவடைந்ததன் பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவிலும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினதும் குழுத்தலைவர்களினதும் முகவர்களின் முன்னிலையிலும்—

(அ) அஞ்சல் வாக்காளர் நிரலின் குறியீடு செய்யப்பட்ட பிரதிகளையும்; அத்துடன்

(ஆ) வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்களையும்,

தனித் தனியான சிப்பங்களாகக் கட்டுவதுடன், அத்தகைய சிப்பங்களை இலச்சினையிடுதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர் நிரலின் குறியீடு செய்யப்பட்ட பிரதிகளைக் கொண்ட இலச்சினையிடப்பட்ட பொதியானது அஞ்சல் வாக்குச்சீட்டு களின் அடுத்துப்பின்னரானதொரு வழங்குகையின் நோக்கத்துக்காகத் தெரிவத்தாட்சி அலுவலரினால் திறக்கப்படலாம் என்பதுடன், வழங்குகை முடிவடைந்ததன்மீது இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்திக்கு இணங் கப் பிரதிகள் மீண்டும் கட்டப்படுவதுடன் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்.

**அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கான ஏற்பாடு.**

16. (1) தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக்காளருக்கு அஞ்சல் வாக்குச் சீட்டுகளின் ஆரம்ப வழங்குகையின் நடவடிக்கைகளில் அஞ்சல் வாக்காளர்களிடமிருந்து பெறப்படக்கூடியனவான மேலுறைகளை இடுவ தற்காக வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுப் பெட்டி களை ஏற்பாடுசெய்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும் கட்டளைச்சட்டத்தின் 61அ என்னும் பிரிவின் நோக்கங்களுக் காக ஒரு வாக்குச்சீட்டுப் பெட்டியாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் களினதும் குழுத்தலைவர்களினதும் சமூகமாயிருப்பவர்களான அத்தகைய முகவர்களுக்குத் திறந்தும் வெறுமையாகவும் காட்டப்படவேண்டுமென் பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் இலச்சினையாலும் தமது இலச்சினை களைப் பொறிக்க விரும்புகின்றவர்களான அத்தகைய முகவர்களினது இலச்சினைகளாலும் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் "அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டி." என்றும் தேர்தலானது எந்தத் தேர்தல் இடப்பரப்புக்கென நடாத்தப்படுகின்றதோ அந்தத் தேர்தல் இடப்பரப்பின் பெயரும் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்ப துடன், அத்தகைய வாக்குச்சீட்டுப் பெட்டியின் பாதுகாப்பான கட்டுக் காப்புக்குத் தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்பாடுசெய்தலும் வேண்டும்.

**அஞ்சல் வாக்காளரிடமிருந்து மேலுறைகள் கிடைக்கப் பெறுதல்.**

17. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன் னர் மேலுறை ஒன்று கிடைக்கப்பெற்றதன்மேல் உடனடியாக அதனைத் திறக்காது அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் அதனை இடுதல் வேண்டும்.

**வாக்கெண்ணும் அலுவலர்கள்.**

18. ஆணையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக் கமைவாக, தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படவுள்ள ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் வாக்குகளை எண்ணுவதற்குப் பொறுப்பாக இருப்பதற்காக வாக்கெண்ணும் அலுவலரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவரின் நியமனத்தை இல்லாதொழிக்கவும் செய்யலாம்; அத்துடன் அத்த கைய வாக்கெண்ணும் அலுவலருக்கு அவரது கடமைகளைப் புரிவதில் உதவு வதற்கென அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும் எழுது வினைஞர்களையும் வேறு அலுவலர்களையும் தெரிவத்தாட்சி அலுவலர் நிய மித்தல் வேண்டுமென்பதுடன், அவர்களின் நியமனத்தை இல்லாதொழிக் கவும் செய்யலாம்.

வாக்கெண்ணுதல் பற்றிய அறிவித்தல்.

19. வாக்கெடுப்பு முடிவடைந்ததன்பின்னர் இயன்றளவு விரைவாக, அஞ்சல் வாக்குச்சீட்டுகளின்மீதான வாக்குகளை எண்ணுவதற்கான ஒழுங்குகளைத் தெரிவத்தாட்சி அலுவலர் செய்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படவிருக்கும் வாக்கெண்ணும் நிலையத்தின் அல்லது ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்தினதும் அமைவிடத்தைப்பற்றியும், அத்துடன் அத்தகைய வாக்கெண்ணுதல் தொடங்கும் தேதியையும், நேரத்தையும்பற்றியும் தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தலில் நிற்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் ஒவ்வொரு செயலாளருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் ஏதேனும் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவருக்கும் எழுத்திலான அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்.

20. ஏதேனும் உள்ளூராதிகாரசபைத் தேர்தலில் வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமித்துள்ள ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும், அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படவுள்ள ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் அத்தகைய வாக்கெண்ணுதல் தொடங்குவதற்கு முன்னர் வாக்குகள் எண்ணப்படுகையின் வருகைதருவதற்கென இருவருக்கு மேற்படாத (இதனகத்துப்பின்னர் "வாக்கெண்ணும் முகவர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவோரான) முகவர்களை நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் எடுத்துக்கூறும் அத்தகைய நியமனங்கள்பற்றிய எழுத்திலான அறிவித்தல் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரால் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் வாக்கெண்ணுதல் தொடங்குவதற்குமுன்னர் வாக்கெண்ணும் அலுவலருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். பெயரும் முகவரியும் அவ்வாறு கொடுக்கப்பட்டிராத எவரேனும் வாக்கெண்ணும் முகவரை வாக்குகள் எண்ணும் நிலையத்துக்குள் அனுமதிக்க வாக்கெண்ணும் அலுவலர் மறுக்கலாம்.

வாக்கெண்ணுகையில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய ஆட்கள்.

21. வாக்கெண்ணும் அலுவலர், அவருக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட ஆட்கள், வாக்கெண்ணும் முகவர்கள் தவிர்ந்த ஆளெவரும், வாக்கெண்ணும் அலுவலரின் சம்மதத்துடனன்றி, வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருத்தலாகாது.

வாக்கெண்ணுகையில் இரகசியத்தைப்பேணல்.

22. அஞ்சல் வாக்குச்சீட்டுகளை எண்ணும் நடவடிக்கைகளில் கட்டளைச்சட்டத்தின் 76 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அஞ்சல் வாக்காளரின் வாக்குச்சீட்டுப் பெட்டியைத் திறத்தல்.

23. அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டியொவ்வொன்றும் வாக்கெடுப்பு முடிவடைந்ததன்பின்னரும் வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணுவதற்கு ஆரம்பிக்கமுன்னரும் வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் அத்தகைய அலுவலரால் திறக்கப்படுதல் வேண்டும்.

மேலுறைகளைத் திறத்தல்.

24. (1) அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டியொன்று திறக்கப்படுமிடத்து, வாக்கெண்ணும் அலுவலர் மேலுறைகளின் எண்ணிக்கையை எண்ணிக் குறிப்பெடுக்க வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் ஒவ்வொரு மேலுறையையும் தனித்தனியாகத் திறத்தலும் வேண்டும்.

(2) வாக்கெண்ணும் அலுவலர் மேலுறையொன்றைத் திறக்குமிடத்தும், அத்துடன்—

(அ) அதற்குள்—

(i) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு உறையொன்றையும் காணுமிடத்து, அல்லது

(ii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச்சீட்டையும் காணுமிடத்து, அல்லது

(iii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணுமிடத்து, அல்லது

(iv) ஒரு வாக்குச்சீட்டு உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச்சீட்டை மாத்திரம் காணுமிடத்து, அல்லது

(v) வாக்குச்சீட்டு உறையொன்றை மாத்திரம் காணுமிடத்து அல்லது

(ஆ) அதற்குள் எதனையும் காணாதவிடத்து,

இவ்வொழுங்குவிதியின் அடுத்துவரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (i) என்னும் உட்பந்தியிலும் (அ) (ii) என்னும் உட்பந்தியிலும் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயங்களில், ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனவும், முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில், ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, வாக்குச்சீட்டு உறையில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும், அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில் ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது வாக்குச்சீட்டில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும் வாக்கெண்ணும் அலுவலர் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவர் அவ்வாறு திருப்திப்படுவாரெனின், அவர் அத்தகைய வெளிப்படுத்துகையை (இதனகத்துப் பின்னர் "ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) பிறிதானதொரு கொள்கலத்திலும் அத்துடன், முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையையும் அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டையும் (இதனகத்துப்பின்னர் "அஞ்சல் வாக்காளர் வாக்குச் சீட்டுகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) இன்னொரு கொள்கலத்திலும் இடுதல் வேண்டும்.

(4) ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்.

(ஆ) சமூகமளித்திருப்பவரான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகைபற்றி வாக்கெண்ணும் அலுவலரின் முடிபுக்கெதிராக எவரேனும் முகவரால் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்படின், முற்போந்த (அ) என்னும் உட்பந்தியின்கீழான அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது குறிக்கப்பட்ட சொற்களுடன் மேலதிகமாக "நிராகரிப்புக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது" என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்;

(இ) முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையை அல்லது முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டை, அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (இ) என்னும உட்பந்தியின்கீழ் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் (இதனகத்துப் பின்னர் "அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொள்கலமொன்றில் இடுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iii) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர்" ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது, வாக்குச்சீட்டு எதுவும், வாக்குச்சீட்டு உறை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய வெளிப்படுத்துகையை இடுதலும் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iv) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டின்மீது "நிராகரிக்கப்பட்டது, ஆளடையாள வெளிப்படுத்துகை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் வாக்குச்சீட்டை இடுதலும் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (v) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டு உறைக்குள் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்று வைக்கப்பட்டுள்ளதா என்பதை நிச்சயிப்பதற்காக வாக்குச்சீட்டு உறையைத் திறத்தல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின்கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல், அத்தகைய உறையில் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்றும் வாக்குச்சீட்டொன்றும் காணப்படின், அத்தகைய வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சிப்படுத்தப் பட்டுள்ளதெனவும், ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது குறிப்பிடப் பட்ட இலக்கமானது, அத்தகைய வாக்குச்சீட்டில் அதேபோன்று குறிப் பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்திருக்கின்றதெனவும் வாக்கெண் ணும் அலுவலர் தம்மை திருப்திப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்—

(அ) அவ்வாறு திருப்திப்படின், அத்தகைய வெளிப்படுத்துகையை ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும், அத்துடன்

(ஆ) அவ்வாறு திருப்திப்படாவிடின்—

(i) அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது" என்ற சொற் களைக் குறித்தல் வேண்டும்;

(ii) சமுகமளித்திருப்பவர்களான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை பற்றி வாக்கெண்ணும் அலுவலரின் முடிப்புக்கெதிராக எவரேனும் முகவரால் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப் படின், முற்போந்த (1) ஆம் உட்பந்தியின்கீழான அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது குறிக்கப்பட்ட சொற் களுடன் மேலதிகமாக "நிராகரிப்புக்கெதிராக ஆட்சே பனை தெரிவிக்கப்பட்டது" என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்;

(iii) வாக்குச்சீட்டு உறையையும் அத்தகைய வாக்குச்சீட்டையும் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (iii) ஆம் உட்பந்தியின்கீழ் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும்.

(9) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின்கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல் வாக்கெண்ணும் அலுவலர்—

(அ) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணின், அல்லது

(ஆ) ஒரு வாக்குச்சீட்டை மாத்திரம் காணின், அல்லது

(இ) எதையுமே காணாதுவிடின்.

அவர்—

(i) முற்போந்த (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது, "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது, வாக்குச்சீட்டெதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(ii) முற்போந்த (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில் அத்தகைய வாக்குச்சீட்டின்மீது "நிராகரிக்கப்பட்டது, ஆளடையாள வெளிப்படுத்துகை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(iii) முற்போந்த (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட விடயத்தில், வாக்குச்சீட்டு உறையின்மீது "நிராகரிக்கப்பட்டது, உள்ளடக்கங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்; அத்துடன்

(iv) வாக்குச்சீட்டு உறையில் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்று அல்லது வாக்குச்சீட்டொன்று காணப்படின் அத்தகைய வெளிப்படுத்துகையை அல்லது வாக்குச்சீட்டை அத்தகைய உறையுடன இணைத்தல் வேண்டும்; அத்துடன்

அவர் வாக்குச்சீட்டு உறையையும். முற்போந்த (iv) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய உறையுடன் சேர்த்து இணைக்கப்பட்ட ஆவணம் அல்லது ஆவணங்கள் எவையேனுமிருப்பின், அவற்றையும் அஞ்சல் வாககாளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

(10) இரண்டாம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பிடு செய்யப்பட்ட விடயத்தில் "நிராகரிக்கப்பட்டது, உள்ளடக்கங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களை மேலுறையின்மீது வாக்கெண்ணும் அலுவலர் குறித்தல் வேண்டும் என்பதுடன், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய உறையை இடுதலும் வேண்டும்.

(11) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தின் பின்பக்கத்தில் அடங்கியுள்ள அறிவுறுத்துரைகளுடன் இணங்க ஒப்பமிடப்பட்டும் சாட்சிப்படுத்தப்பட்டும் இருந்தாலன்றி ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டும் சாட்சியப்படுத்தப்பட்டும் இருக்கின்றதெனக் கருதப்படுதலாகாது.

வாக்குச்சீட்டு உறைகளைத் திறத்தல்.

25. (1) இருபத்துநான்காம் ஒழுங்குவிதியின்கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன்மேல், வாக்கெண்ணும் அலுவலர், அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டு உறையையும் தனித்தனியாகத் திறத்தல் வேண்டும்.

(2) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டு எதனையும் உள்ளடக்கியிராதவிடத்து, வாக்கெண்ணும் அலுவலர் அவ்வுறையின்மீது "வாக்குச்சீட்டெதுவும் உள்வைக்கப்படவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அதனை இடுதலும் வேண்டும்.

(3) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டொன்றைக் கொண்டிருக்கின்றவிடத்து, வாக்கெண்ணும் அலுவலர்—

(அ) அத்தகைய உறையின்மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமானது, அத்தகைய வாக்குச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அதேபோன்ற இலக்கத்துடன் நேரொத்திருப்பின், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய உறை வாக்குச்சீட்டொன்றைக் கொண்டிருப்பதுடன் அத்தகைய வாக்குச்சீட்டின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது அத்தகைய உறையின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கத்துடன் நேரொத்ததாகவிருக்காவிடின், அத்தகைய உறையில் " நிராகரிக்கப்பட்டது " என்ற சொல்லைக் குறித்து, அத்தகைய வாக்குச்சீட்டை அத்தகைய உறையுடன் இணைத்து, அவற்றை அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

**நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும் ஆளடையாள வெளிப்படுத்துகைகளையும் இலச்சினையிடுதல்.**

26. இருபத்தைந்தாம் ஒழுங்குவிதியின்கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன்மேல், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் வாக்கெண்ணும் அலுவலர், இரு தனித்தனியான பொதிகளில் வைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொதிகளை இலச்சினையிடுதலும் வேண்டும்.

**வாக்கெண்ணுதல்.**

27. (1) வாக்கெண்ணு அலுவலர் வாக்குகளை எண்ணத் தொடங்கு முன்னர், அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எத்தகைய வாக்கெண்ணும் முகவர்கள் சமூகமாயுள்ளார்களோ அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில், அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச் சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாக்குச் சீட்டுகளை வெளியே எடுப்பதுடன், அத்தகைய கொள்கலத்திலுள்ள அத்தகைய சீட்டுகளை எண்ணி எண்ணிக்கையைப் பதிதலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாககுச்சீட்டுகளிலுள்ள வாக்குகளை எண்ணுதலில் கட்டளைச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும், 63 ஆம் பிரிவினதும் 63அ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகள், ஏற்புடையனவாதல் வேண்டும்.

**வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல்.**

28. வாக்கெண்ணுதல் முற்றுப்பெற்றதன்மேல், உடனடியாக, வாக்கெண்ணும் அலுவலரானவர் இலச்சினையிடப்பட்ட பொதிகளில்—

(அ) எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுகளையும்;

(ஆ) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளையும்;

(இ) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைப் பற்றிய எழுத்திலான கூற்றொன்றையும், கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்

படி தயாரிகப்பட்டதும், அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமை பற்றியதுமான கூற்றொன்றையும்;

(ஈ) கட்டளைச்சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட கூற்றையும்;

(உ) இருபத்தாறும் ஒழுங்குவிதியில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள இலச்சினையிடப்பட்ட இரு பொதிகளையும்;

(ஊ) 27(1) ஆம் ஒழுங்குவிதியின்கீழான வாக்கெண்ணுதல் பற்றிய பதிவேட்டையும்;

தெரிவத்தாட்சி அலுவலரிடம் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

## இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை

### படிவம் அ

3 ஆம் ஒழுங்குவிதி

ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம்..................
..................................உள்ளூராதிகாரசபை இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, (உள்ளூராதிகார சபையின் பெயரைத் தருக).

..........................................ஆகிய யான், மேற்சொல்லப்பட்ட உள்ளூராதிகாரசபை இடப்பரப்பிற்கென வலுவிலுள்ள தேருநர்கள் இடாப்பில்..................
..................................என, எனது பெயர் காணப்படுகின்றதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இடாப்பில் எனது பெயர் பின்வரும் தொடர் இலக்கத்திலும், வாக்கெடுப்புப் பிரிவிலும், வாக்கெடுப்பு மாவட்டத்திலும் அத்துடன் தேர்தல் மாவட்டத்திலும் காணப்படுகின்றது :—

தேர்தல் மாவட்ட இலக்கம் : ..........................................

வாக்கெடுப்புப் பிரிவு எழுத்து : ..........................................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் : ..........................................

எனது பெயரின் தொடர் இலக்கம் : ..........................................

*(1) எனது தொழிலின், அதாவது—

*(அ) இலங்கைத் தரைப்படையின் / இலங்கைக் கடற்படையின் / இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக;

*(ஆ) பொலிசுத் திணைக்களத்தில்/இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களத்தில்/அஞ்சல் திணைக்களத்தில்/தொலைத்தொடர்புகள் திணைக்களத்தில்/இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில்/ ............பிராந்தியப் போக்குவரத்துச் சபையில் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

*(இ) தேர்தலுடன் தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள*/நியமிக்கப்படும் சாத்தியமுள்ள பகிரங்க சேவையிலுள்ள ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

*(ஈ) அத்தகைய தேர்தலுடன் தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள*/நியமிக்கப்படும் சாத்தியமுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக,

இருக்கின்ற எனது தொழிலின் குறிப்பான சந்தர்ப்பங்களின் காரணமாக :

*(2) .......................உள்ளூராதிகார சபையில் எனது வேட்பாண்மை காரணமாக, (உள்ளூராதிகார சபையின் பெயரைத் தருக) எனக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க இயலாது/இயலாது போகும் சாத்தியமுள்ளது என்பதால், மேற்கூறப்பட்ட உள்ளூராதிகாரசபை உறுப்பினர்களின் தேர்தலில் ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு இத்தால் நான் விண்ணப்பிக்கின்றேன்.

எனது வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்படவேண்டிய முகவரி பின்வருமாறு :—

| | |
|---|---|
| கீழே காணப்படும் குறிப்புக்கிணங்க ஓர் அத்தாட்சிப்படுத்தும் அலுவராகப் பணிபுரிவதற்கு விண்ணப்பகாரர் உரித்துடையவராக இல்லாவிடின், விண்ணப்பகாரரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலக முறையான பதவிப்பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக. | .............................. .............................. .............................. .............................. .............................. .............................. |
| விண்ணப்பகாரர் ஓர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகப் பணிபுரிவதற்கு உரித்துடையவரெனின், விண்ணப்பகாரரின் அலுவலக முறையான பதவிப் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக. | .............................. .............................. .............................. .............................. |

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் /அவரால் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்துக்காக எனக்கு*/விண்ணப்பகாரருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க நான் இயலாதவனாக இருக்கிறேன்*/ எனக்கு இயலாதுபோகும் சாத்தியமுள்ளது*/விண்ணப்பகாரர் இயலாதவராக இருக்கின்றார்*/விண்ணப்பகாரருக்கு இயலாதுபோகும் சாத்தியமுள்ளது என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான எனது அலுவலக முறையான பதவிப்பெயரும் முகவரியும் சரியானவை.

————,
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின்*/விண்ணப்பகாரரின் ஒப்பமும் பதவிப்பெயரும்.

தேதியும் அலுவலகமுறையான இலச்சினையும்...........................
*பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுக.

குறிப்பு

1. விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பகாரர் தேருநரொருவராகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் பெயர்நியமனம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

2. விண்ணப்பம் ஒவ்வொன்றும் முறைப்படி நிரப்பப்படுதல் வேண்டும் ; அல்லாவிடில் தெரிவத்தாட்சி அலுவலரால் அது நிராகரிக்கப்படுவதற்கிலக்காக இருக்கும்.

3. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவு பற்றி அறிவிக்கப்படுவார்.

4. எவ்விண்ணப்பகாரரின் விண்ணப்பமானது அனுமதிக்கப்பட்டுள்ளதோ அவ் விண்ணப்பகாரர் எவருக்கும் அவர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவராகப் பணிபுரிய உரித்துடையவராக இருந்தால் அவரின் விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருப்பதான அவரின் பெயருக்கும், முகவரிக்கும் அல்லது அவர் அவ்வாறு உரித்துடையவராக இல்லாவிடின் எந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலக முறையான பதவிப்பெயரும் முகவரியும் அவரின் விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்டுள்ளனவோ அந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து வாக்குச் சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்படும்.

5. "அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்" என்ற சொல்லமைப்பு—

(அ) இலங்கைத் தரைப்படையின் அல்லது இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக—

(i) அத்தரைப்படையின் ஏவுநராக அல்லது அக்கடற்படையின் தலைவராக அல்லது அவ்வான்படையின் ஏவுநராக அல்லது விண்ணப்பகாரர் சேவைபுரியும் கூறின் அல்லது தாபனத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலராக இருப்பின், விண்ணப்பகாரர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) அவர், இவ்வுட்பந்தியின் (i) ஆம் வாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்பகாரர் சேவை புரியும் கூறின் அல்லது தாபனத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக்கொண்டிருக்கும் அலுவலரெனப் பொருளாகும் ;

(ஆ) பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக—

(i) ஏதேனும் அலுவலகத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக்கொண்டிருக்கும் அலுவலராகவிருப்பின் விண்ணப்பகாரர் எனப்பொருளாகும் ; அல்லது

(ii) அவர் இவ்வுட்பந்தியின் (i) ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்பகாரர் சேவை புரியும் அலுவலகத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலரெனப் பொருளாகும் ; அல்லது

(இ) உள்ளூரதிகார சபைத் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பகாரர் தொடர்பாக, விண்ணப்பகாரர் தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்தல் இடப்பரப்புக்கான தெரிவத்தாட்சி அலுவலர் எனப்பொருளாகும்.

6 ஆம் ஒழுங்குவிதி

## படிவம் ஆ

### ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்

### படிவத்தின் முன்பக்கம்

வாக்குச்சீட்டின் தொடர் இலக்கம் :————.

(தெரிவத்தாட்சி அலுவலரினால் உட்புகுத்தப்படுதல் வேண்டும்)

*எனது ஒப்பத்துக்குச் சாட்சிக்காரரொருவராக உள்ளவரான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மேற்பார்த்து மேலுள்ள தொடர் இலக்கத்தைக் கொண்ட வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச்சீட்டைக் கொண்ட உறையும் (இவை இப்பொழுது எனக்குத் தரப்பட்டுள்ளன) எவ்வாளுக்கு அனுப்பப்பட்டதோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

**மேலே உள்ள தொடரிலக்கத்தைக் கொண்ட வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச்சீட்டைக்கொண்ட உறையும் (இவை இரண்டையும் நான் இப்பொழுது முன்வைக்கின்றேன்) நேரடியாக எவ்வாளுக்கு அனுப்பப்பட்டனவோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

———,
வாக்காளரின் ஒப்பம்.

தேதி :———.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு, அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற எனது தன்மையில் எனது மேற்பார்வையின்கீழ், குறிப்பீடுசெய்யப்பட்ட வாக்குச்சீட்டும் உறையும் அனுப்பப்பட்டன. நடக்கவுள்ள உள்ளூராதிகார சபைத் தேர்தலில் வேட்பாளரொருவராக இருப்பவரான*/எனது பொறுப்பிலுள்ள கூறில்*/ தாபனத்தில்*/அலுவலகத்தில் தொழிலாற்றுகின்ற மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன்.

வாக்காளருக்குக் கையளிக்கப்பட்ட வாக்குச்சீட்டானது எனது அலுவலகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட வாக்களிப்பு அறையில் அவரால் உடனடியாகக் குறியீடு செய்யப்பட்டது. குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டானது வாக்காளரால் வாக்குச்சீட்டு உறைக்குள் இடப்பட்டு எனது முன்னிலையிலும் வாக்காளரின் முன்னிலையிலும் உறையானது இலச்சினையிடப்பட்டது.

மேயுள்ள ஆளடையாள வெளிப்படுத்துகையானது வாக்களிப்பதற்கு முன்னர் வாக்காளரால் எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.

**தனிப்பட்டமுறையில் நான் அறிந்தவரான மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளானவர் மேலே குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வாக்குச்சீட்டையும் உறையையும் எனக்குக் காட்டியுள்ளார் என்பதுடன், மேலே உள்ள வெளிப்படுத்துகையை எனது முன்னிலையில் ஒப்பமிட்டும் உள்ளார்.

———,
சாட்சிக்காரரின் ஒப்பமும், பதவிப் பெயரும்.

தேதியும் அலுவலகமுறையான இலச்சினையும் :———.

(இப்படிவத்தின் பின்பக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளைப் பார்க்க)

*பொருத்தமில்லாதுவிடின் நீக்கிவிடுக.

**வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் நேரடியாக வாக்காளர்களுக்கு அவர்களின் அலுவலக முறையான பதவிப்பெயரினதும் முகவரியினதும்கீழ் அனுப்பப்பட்டனவோ, அந்த வாக்காளர்கள் தொடர்பாக மட்டுமே ஏற்புடையதல்லாதவிடத்து, நீக்கிவிடப்படுதல் வேண்டும். அத்தகைய வாக்காளர்கள் தொடர்பிலான வெளிப்படுத்துகைக்கான சாட்சி, மறு பக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளில் விதித்துரைக்கப்பட்டவராக இருப்பார்.

## படிவத்தின் பின்பக்கம்

(அ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும், எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப்பட்டுள்ளனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்.

1. எவ்வாக்காளர் தொடர்பில் வாக்குச்சீட்டும் மற்றைய அவணங்களும் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப்பட்டுள்ளனவோ அவ்வாக்காளர் வெளிப்படுத்துகையின்மீது ஒப்பமிடுவதன் முன்னர்—

(i) அத்தகைய அலுவலரின் மேற்பார்வையின் கீழ் வாக்காளருக்கு ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவமும், வாக்குச்சீட்டும் அனுப்பிவைக்கப்பட்ட உறையைப் பார்த்தல் வேண்டும் ;

(ii) ஆளடையாள வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டின் தொடர் இலக்கமானது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டில் காணப்படுகின்ற, அதே இலக்கத்துடன் ஒத்ததாக உள்ளதா எனப் பார்த்தல் வேண்டும்.

வாக்காளரானவர் அதன்பின்னர் அவரின் சாட்சியாகப் பணிபுரியவேண்டிய அத்தகைய அலுவலரின் முன்னிலையில் வெளிப்படுத்துகையை ஒப்பமிடுதல் வேண்டும்.

2. வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

3. வாக்காளர், வாக்குச்சீட்டொன்றின் வலதுகைப் பக்கத்தில் அந்நோக்கத்துக்கென ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய சீட்டொன்றை புள்ளடியால் "X" என இவ்வாறு குறிப்பிட்டு வாக்களித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்சியால் அல்லது தொகுதியால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 3 வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முன்னுரிமைகளை, ஒவ்வோர் அத்தகைய வேட்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டின்மீது வாக்குச்சீட்டின் அடியில் குறியீடொன்றை இடுவதன் மூலம் சுட்டிக் காட்டலாம்.

4. வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

5. வாக்காளர் வாக்களித்ததன் பின்னர், உடனடியாக வாக்குச் சீட்டை மடித்து எவ்வுறையின் மீது "வாக்குச்சீட்டு உறை" என்ற சொற்கள் அச்சிடப்பட்டுள்ளனவோ, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறிய அவ்வுறையை அவரின் சாட்சியிடமிருந்து பெற்று, வாக்குச்சீட்டின் முன்பக்கத்தைக் காட்டாது குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை அதில் இட்டு அவ்வுறையை ஒட்டுதலும் வேண்டும். அதனை அடுத்து வாக்காளரினதும் அவரது சாட்சியினதும் முன்னிலையில் உறையானது இலச்சினையிடப்படுதல் வேண்டும்.

வாக்காளர் அதன்பின்னர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை அவரது பூர்த்திசெய்யப்பட்ட ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்ட மற்றைய பெரிய உறையிலிட்டு, உறையை ஒட்டி தாமதமின்றி அனுப்பப்படுவதற்காக அவரின் சாட்சியிடம் கொடுத்தல் வேண்டும்.

6. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையுமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலரை அடையுமாறு திருப்பியனுப்பப்பட்டாலன்றியும், முறையாக ஒப்பமிடப்பட்டதும் சாட்சிப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பியனுப்பி வைக்கப்படவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அலுவலகமுறையான பதவிப் பெயரினதும், முகவரியினதும் கீழ் நேரடியாக அனுப்பப்பட்டனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்.

1. வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகையை ஒப்பமிடமுன்னர், அத்தகைய வெளிப்படுத்துகையை அவர் எவ்வாளுக்கு முன்னால் ஒப்பமிட வேண்டுமோ அவ்வாளுக்கு—

(அ) அத்தகைய வெளிப்படுத்துகையை குறித்துரைக்கப்பட்டுள்ளதான அதே இலக்கத்தைக் கொண்டிருக்கின்ற வாக்குச்சீட்டைக் காட்டுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) வாக்காளர் ஆடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தையும் வாக்குச் சீட்டையும் கிடைக்கப்பெற்ற உறையைக் காட்டுதல் வேண்டும்.

2. பின்வருபவராக இருக்கவேண்டிய ஒரு சாட்சியின் முன்னிலையில் அதாவது—

(அ) வாக்காளரானவர் இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக இருப்பின் அத்தகைய தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் ஆணைபெற்ற அலுவலரொருவரின,

(ஆ) வாக்காளரானவர் பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருப்பின் அத்தகைய சேவையின் உயர் அலுவலரொருவரின் அல்லது வாக்காளருக்கு உயர் அலுவலர் எவரும் இல்லாவிடின், அத்தகைய சேவையின் வேறெவரேனும் அலுவலரொருவரின், முன்னிலையில் வாக்காளர், ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தை ஒப்பமிடுதல் வேண்டும்.

3. வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

4. வாக்காளர், வாக்குச்சீட்டொன்றில் வலதுகைப்பக்கத்தில் அந்நோக்கத்துக்கான ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய சீட்டொன்றை புள்ளடியால் "×" என இவ்வாறு குறிப்பிட்டு வாக்களித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்சியால் அல்லது தொகுதியால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட 3 வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முன்னுரிமைகளை ஒவ்வோர் அத்தகைய வேட்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்துக்கு நேரொத்த தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டின்மீது வாக்குச்சீட்டின் அடியில் குறியீடொன்றை இடுவதன்மூலம் சுட்டிக்காட்டலாம்.

5. வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

6. வாக்காளர், வாக்களித்ததன்பின்னர் உடனடியாக உள்ளே வைக்கப்பட்டிருந்த எவ்வுறையின்மீது "வாக்குச்சீட்டு உறை" என்ற சொற்கள் அச்சிடப்பட்டுள்ளனவோ, அச்சிறிய உறையில் குறியீடுசெய்யப்பட்ட வாக்குச்சீட்டை இட்டு ஒட்டுதலும் வேண்டும். அதன்பின்னர், உறையானது வாக்காளரதும் சாட்சியினதும் முன்னிலையில் இலச்சினையிடப்படுதல் வேண்டும். அதன்பின், வாக்காளர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்டதும் உள்ளே வைக்கப்பட்டிருப்பதுமான மற்றைய பெரிய உறையிலிட்டுத் தாமதமின்றி அஞ்சல்மூலம் அவற்றை அனுப்புதல் வேண்டும். வாக்காளர் வாக்குச்சீட்டை உடனேயே திருப்பி வைக்காவிடில் எண்ணப்படுவதற்கெனச் சேர்ப்பதற்கான காலம் தவறிவிடும்.

7. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையுமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலரை அடையுமாறு திருப்பியனுப்பப்பட்டாலன்றியும், முறையாக ஒப்பமிடப்பட்டதும், சாட்சியப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பியனுப்பிவைக்கப்படவில்லையெனக் கருதப்படுதல்வேண்டும்.

படிவம் இ. 9 (1) ஆம் ஒழுங்கு விதி

இரகசியம் பேணுதற்கான வெளிப்படுத்துகைப் படிவம்

எனக்கு வாசித்துக் காட்டப்பட்டவையான இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்கு விதியின் (1) ஆம் பந்தியால் தடைசெய்யப்பட்டுள்ள எதையும் இந்நடவடிக்கைகளில் நான் செய்யமாட்டேனென நான் பயபக்தியாக வாக்குறுதிசெய்து வெளிப்படுத்துகின்றேன்.

————,
வெளிப்படுத்துகை செய்பவரின் ஒப்பம்.

————,
எவ்வாளின் முன்னிலையில் வெளிப்படுத்துகை
செய்யப்படுகின்றதோ அவ்வாளின் ஒப்பம்.

தேதி :————

குறிப்பு :—எவ்வாளின் முன்னிலையில் வெளிப்படுத்துகையானது செய்யப்படுகின்றதோ அவ்வாளினால் வெளிப்படுத்துகை செய்பவருக்கு குறிப்பிடுசெய்யப்பட்ட பந்தி வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

34. "தேர்தல்கள் அலுவலருக்கு" அல்லது "உதவித் தேர்தல்கள் அலுவலருக்கு" என முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டம் ஆரம்பமான தேதியின் பின்னர், எந்த மாவட்டத்தினுள் தேர்தல் இடப்பரப்பு அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ள மாவட்டத்திற்கென 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்துடன் எந்த மாவட்டத்தினுள் இடப்பரப்பு அமைந்ததோ அந்த மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் முறையே செய்யப்பட்ட குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.